# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**********************

## இலங்கை முழுவதும் 300 மாணவர்களுக்கு மகாத்மா காந்தி புலமைப்பரிசில்கள்

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் உயர் தரம் கற்கும் 300 பாடசாலை மாணவர்களுக்கு சிறப்புமிக்க மகாத்மா காந்தி புலமைப் பரிசில், மாண்புமிகு இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய, கல்வி மற்றும் உயர் கல்வி பிரதி அமைச்சர் கௌரவ டாக்டர் மதுர செனவிரத்ன மற்றும் பதில் உயர் ஸ்தானிகர் டாக்டர் சத்யாஞ்சல் பாண்டே ஆகியோரால் வழங்கப்பட்டன. கல்வி அமைச்சில் இன்றைய தினம் (9) நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

2. இந்த புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டங்களிலும் தகுதி அடிப்படையில் முதல் ஆறு இடங்களையும் பெற்று உயர் தரம் கற்கும் மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 2500 ரூபா (இலங்கை) வீதம் வழங்கப்படும். 2021-2024 காலப்பகுதிகளைச் சேர்ந்த இரண்டு தொகுதியினருக்கான புலமைப் பரிசில்கள் இம்முறை சம நேரத்தில் வழங்கப்பட்டன.

3. இங்கு உரை நிகழ்த்தியிருந்த மாண்புமிகு பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய அவர்கள் இந்தியாவால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்களுக்காகவும் அதேபோல மகாத்மா காந்தி புலமைப் பரிசில்களை வழங்குகின்றமைக்காகவும் இந்திய அரசாங்கத்துக்கு தனது நன்றியினைத் தெரிவித்திருந்தார். தொடர்ந்து, மாணவர்களைப் பாராட்டிய பிரதமர் அவர்கள் இச்சந்தர்ப்பத்தில் மகாத்மா காந்தி அவர்களது சிந்தனைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக குறிப்பிட்டு மாணவர்களும் அவரது மரபினை பிரதிபலிக்கவேண்டுமென ஊக்குவித்திருந்தார்.

4. இதேவேளை இங்கு தனது கருத்துக்களை தெரிவித்திருந்த பதில் உயர் ஸ்தானிகர் டாக்டர் சத்யாஞ்சல் பாண்டே அவர்கள், மாணவர்களின் சாதனைகளுக்காக அவர்களை பாராட்டியதுடன், குறித்த மகாத்மா காந்தி புலமைப்பரிசில் திட்டமானது வெறுமனே உதவிகள் தேவைப்படும் அதேவேளை, கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஒரு நிதி உதவி அல்ல, இது அவர்களுக்கு வாழ் நாள் முழுவதுக்குமான ஓர் அங்கீகாரம் எனவும் குறிப்பிட்டார். மேலும், இப்புலமைப்பரிசிலைப் பெற்றவர்கள் தாம் கல்வித் திறனில் சிறந்து விளங்குவது மட்டுமல்லாமல், அந்த சிறந்த தலைவரின் உன்னதமான கருத்துகளை தமது வாழ்நாள் முழுவதும் பரப்ப வேண்டுமென எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

5. இப்புலமைப் பரிசிலுக்கு அப்பால் தொழில்நுட்பம், பொறியியல், கலைத்துறை, விஞ்ஞானம், சுதேசிய மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் 210 புலமைப் பரிசில்கள் இலங்கை மாணவர்களுக்காக இந்திய அரசாங்கத்தால் வருடாந்தம் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் தொழில்திறனை வளர்ப்பதற்காக இலங்கை அரச உத்தியோகத்தர்களுக்காக

**ITEC** திட்டத்தின் கீழ் 400க்கும் மேற்பட்ட புலமைப் பரிசில்கள் முழுஅளவிலான அனுசரணையுடன் வழங்கப்படுகின்றன. இவற்றுக்கு மேலதிகமாக, 2024 டிசம்பரில் இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க அவர்களின் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, இந்தியாவில் 1500 இலங்கை அரச ஊழியர்களுக்கு 5 வருட காலத்திற்கு பயிற்சி அளிப்பதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதேபோல, 2025 ஏப்ரலில் பிரதமர் அவர்களது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இலங்கை நிபுணர்களுக்கு ஒவ்வொரு வருடமும் 700 மேலதிக தனிப்பயனாக்கப்பட்ட ஆளுமை மேம்பாட்டு பயிற்சி ஆசன்ங்களை இந்தியா வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக, இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டம் போன்ற தற்போதைய பயிற்சித் திட்டங்களுக்கு மேலாக, இந்தியாவின் இந்த ஆளுமை மேம்பாட்டு முயற்சிகள், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1000 இலங்கையர்களுக்கான அறிவு பரிமாற்றம் மற்றும் நிபுணத்துவ மேம்பாட்டு திட்டங்களை உள்ளடக்கியதாகும்.

**********

கொழும்பு
09 பெப்ரவரி 2026